**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : |
| Preliminary Register : | | Case No. | : **S.C.19/2022** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution | : **P.W. 15** |
| | | Defence | : **D.W.** |
| | | Court | : **C.W.** |

| **Name :** | டாக்டர்.விவேக் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.12.2025**

**எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூரில் தனியார் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.01.2021ம் தேதி காலை 06.30 மணிக்கு பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 56 வயதான பழனிசாமி த/பெ.சுப்ரமணி காட்டுக்கொட்டாய், பெரியம்மாபாளையம், குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் அரிவாளல் 22.01.2021ம் தேதி இரவு 11.30 மணிக்கு அவரது வீட்டில் வைத்து வெட்டிவிட்டதாகவும், அதன்பிறகு அவர் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு முதல்சிகிச்சை செய்துகொண்டு, பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்தததில் 1 செ.மீ அளவுள்ள தையலிட்ட காயம் வயிற்றின் இடதுபுறம் இருந்தது. 2செ.மீ அளவுள்ள தையலிட்ட காயம் இடதுபக்க இடுப்பு பகுதியில் இருந்தது. 3செ.மீ தையலிட்ட காயம் இடது முழங்கையில் இருந்தது. இதன்அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்றளித்தேன். அவரை நான்

உள்நோயாளியாக அனுமதித்தேன். இது சம்மந்தமாக நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.8, போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரிக்கும்போது தன்னை பழனிசாமி கத்தியால் குத்தியதாக என்னிடம் கூறியதாக நான் சொன்னேனா என்றால் Sickle என்று சொன்னேன். அரியலூரில் AR Entry போடவில்லை என்று என்னுடைய AR Entryயில் குறிப்பிட்டுள்ளேன். என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது தையலிட்ட காயத்தோடு நடந்து வந்ததால் காயத்தின் ஆழம், நிறம் மற்றும் ஏற்பட்ட காலம் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லவில்லை. அவரை உள்நோயாளியாக அனுமதித்த பின்னர் மேற்கொண்டு என்ன சிகிச்சை செய்யப்பட்டது என்ற சிகிச்சை விவரங்கள் எனக்கு தெரியாது. AR Entry அடிப்படையில் நான் சிறு காயம் என்று இறுதிகருத்து வழங்கியுள்ளேன்.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.